# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

**அறிவிக்கை எண்.2/2018** **நாள் : 17.10.2018**

தொழிலாளர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம், அனைத்து மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்கள் மற்றும் துயில் கூடங்களில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப்பணிடங்களின் எண்ணிக்கை (தோராயமானது) | கல்வி மற்றும் தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 66 | பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி |
| 2 | கணினி இயக்குபவர் | 111 | (i) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி<br>(ii) கணினியில் சான்றிதழ் அல்லது பட்டயப் படிப்பு<br>(iii) கணினியில் ஒரு மணி நேரத்தில் 8000 எழுத்துக்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யும் திறமை |

**சம்பளம் ஏற்ற முறை : ரூ 19500 – 62000/-**

## 2. காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப்பட்டியல்

இத்தெரிவிக்கு இடஒதுக்கீட்டு விதிகள் பொருந்தும். அரசாணையின்படி மாற்றுத் திறனாளிகளுக்கென 4% பணியிடங்கள் ஒதுக்கப்படும்.

**இளநிலை உதவியாளர்**

| | | | | | PSTM | | | | DIFFERENTLY ABLED | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CATEGORY | G | W | DW | EX | G | W | DW | EX | B /LV (G) | A (G) | D/HH(W) | TOTAL |
| GT | 12 | 2 | 1 | 1 | 2 | 1 | | | | | 1 | 20 |
| BC | 8 | 4 | | 1 | 2 | 1 | | | 1 | 1 | | 18 |
| BC(M) | 1 | | | | 1 | | | | | | | 2 |
| MBC/DC | 8 | 4 | | | 2 | | | | | | | 14 |
| SC | 5 | 2 | | | 2 | 1 | | | | | | 10 |
| SC (A) | 1 | | | | | | 1 | | | | | 2 |
| TOTAL | 35 | 12 | 1 | 2 | 9 | 3 | 1 | 0 | 1 | 1 | 1 | 66 |

**<u>கணினி இயக்குபவர்</u>**

| CATEGORY | G | W | DW | EX | PSTM | | | | DIFFERENTLY ABLED | | | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | G | W | DW | EX | B /LV (G) | A(W) | D/HH(G) | LD(G) | |
| GT | 19 | 6 | 0 | 1 | 5 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 33 |
| BC | 15 | 6 | 1 | 0 | 4 | 1 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 30 |
| BC(M) | 2 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| MBC/DC | 9 | 5 | 1 | 1 | 3 | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 22 |
| SC | 8 | 4 | 0 | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 17 |
| SC (A) | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 |
| ST | 1 | 0 | 0 | 0 | 1* | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| TOTAL | 56 | 24 | 2 | 3 | 15 | 5 | 0 | 1 | 2 | 1 | 1 | 1 | 111 |

***Backlog vacancy**

**<u>Abbreviation</u>**

**G** General
**W** Women
**DW** Destitute widow
**EX** Ex-Service man
**PSTM** Persons studied in Tamil Medium
**GT** General Turn
**BC** Backward Class
**BC (M)** Backward Class (Muslim)
**MBC /DC** Most Backward Class /Denotified Community
**SC** Scheduled Caste
**SC(A)** Scheduled Caste (Arunthathiyar)
**ST** Scheduled Tribe

**<u>DIFFERENTLY ABLED</u>**

**B/LV** Blindess and Low Vision
**A** Autism, Intellectual Disability, Specific learning Disability and Mental Illness/ Multiple Disabilities
**D/HH** Deaf and Hard of Hearing
**LD** Locomotor Disabilityincluding Cerebral Palsy, Leprosy Cured, Dwarfism, Acid attack victims and Muscular Dystrophy

| வ.எண். | விவரம் | அறிவிக்கை நாள் |
|---|---|---|
| 1 | அறிவிக்கை நாள் | 17.10.2018 |
| 2 | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய கடைசி நாள் | 02.11.2018 |

**3. விண்ணப்பிக்கும் முறை/ கட்டணம்**

http://www.labour.tn.gov.in/Labour/recruitment/notification2.pdf என்ற இணையதள முகவரியில் மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் புகைப்படம் ஒட்டி, தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து **செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், 8, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034** என்ற முகவரிக்கு "The Secretary, TNCWWB" என்ற பெயரில் ரூ.100/–க்கான வங்கி வரைவோலை (DD payable at Chennai) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு விண்ணப்ப கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது. விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டிய கடைசி நாள். 02.11.2018 மாலை 5.45 மணி வரை. அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**4. கட்டணச்சலுகை**

மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு விண்ணப்ப கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

**5. தகுதிகள்– வயது வரம்பு** 01.07.2018 அன்றுள்ளபடி

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (பூர்த்தியடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (பூர்த்தியடைந்து இருக்க கூடாது) |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | 35 வயது |
| 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 18 வயது | 32 வயது |
| 3 | ஏனையோர் | 18 வயது | 30 வயது |

**குறிப்பு:**

**1.** ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகைகளைச் சார்ந்தோர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் குறைந்தபட்ச பொதுக்கல்வித்தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித்தகுதியைப் பெற்றிருப்பின் அதாவது புகுமுக வகுப்பு/மேல்நிலைப்பள்ளி/பட்டயப்படிப்பு/பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

**2. மாற்றுத்திறனாளிகள்** : நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்பு சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.

**3. முன்னாள் இராணுவத்தினர்:**

(அ) ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு 53 வயது வரை சலுகை வழங்கப்படும்.

(ஆ) ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 48 வயது வரை சலுகை வழங்கப்படும்.

(இ) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு / பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

(iv) பிற வகையினருக்கான வயது வரம்பு சலுகை அரசு விதிகளின்படி வழங்கப்படும்.

**6. தமிழ் மொழியில் தகுதி**

**17.10.2018** நாளிட்ட அறிவிக்கையன்று விண்ணப்பதாரர்கள் போதுமான தமிழ்அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**7. உடற்தகுதி**

பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தரத்தில் உடற்தகுதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வைத் தகுதிச்சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

**8. தெரிவு செய்யும் முறை**

எழுத்துத் தேர்வில் (பத்தாம் வகுப்பு தரம்) பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் வாரியத்தால் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் உத்தேசப்பட்டியல் பதவிவாரியாக தனித்தனியே இணையதளத்தில் வெளியிடப்படும். மூலச்சான்றிதழ்களின் சரிபார்ப்பிற்கு பின்னர், தகுதியான விண்ணப்பதாரர்கள் அவர்கள் சார்ந்த பிரிவு, காலிப்பணியிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் தரவரிசைப்படி கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கும், சான்றிதழ் சரிபார்த்தல் மற்றும் கலந்தாய்விற்கும் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.

கணினி இயக்குபவர் பதவிக்கு கணினி அறிவு மற்றும் கணினியில் ஒரு மணி நேரத்தில் 8000 எழுத்துக்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யும் திறனை கண்டறியும் வகையில் கூடுதலாக ஒரு தேர்வு நடத்தப்படும்.

**9. பொதுவான தகவல்கள்**

A. மேற்படி காலிப்பணியிடம் நிரப்ப நியமன இடஒதுக்கீட்டு விதி பின்பற்றப்படும்.

B. அரசு ஆணை (நிலை) எண். 145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 30.09.2010–இல் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட உள்ள காலிப்பணியிடங்களில் 20% (சதவீதத்தை) பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ் வழியில் பயின்றவர்களைக் கொண்டு முன்னுரிமையளித்து நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான 20% இடஒதுக்கீட்டு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். அரசு ஆணை நிலை எண். 40, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை, நாள். 30.04.2014–இல் தமிழ்வழியில் பயின்றவர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட இடஒதுக்கீட்டு வழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, தமிழ்வழியில்

பயின்றவர்களுக்கான (PSTM) முன்னுரிமையைப் பெற விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியினை தமிழ்வழியில் பயின்று அதற்குரிய சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மேலும், தமிழ்வழியில் பயின்ற விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில், முன்னுரிமைக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் முன்னுரிமை நீக்கப்பட்டு பிற தகுதிகளைக் கொண்ட அந்தந்த வகுப்பினரைக் கொண்டு நிரப்பப்படும்.

C. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோரயமானதாகும். தெரிவு முடியும் வரை பணியிடங்களின் எண்ணிக்கை எந்த நேரத்திலும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

D. அரசு விதிகளின்படி, முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு இப்பதவிக்கு பொருந்தும். தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த போதிய முன்னாள் இராணுவத்தினர் கிடைக்கப்பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சுழற்சி முறையிலான இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த பிற தகுதிகளை உடையோரைக் கொண்டு நிரப்பப்படும்.

E. அரசாணை (நிலை) எண். 21, மாற்றுத்திறனாளிகள் நலத் (DAP3-2) துறை, நாள். 30.05.2017– இன்படி மாற்றுத்திறனாளிகளுக்கென வகைப்படுத்தப்பட்ட இனங்களுக்கு 4% இடஒதுக்கீடு பொருந்தும். ஆகையால், மாற்றுத் திறனாளிகள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். அவர்களுடைய விண்ணப்பங்கள் அரசின் ஆணைகளுக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

F. மாற்றுத்திறனாளிகள் உடல் ஊனத்தின் தன்மை/ ஊனத்தின் விழுக்காட்டளவு (%) குறித்த சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

G. தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த தகுதிவாய்ந்த பிற விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

H. ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கு மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள்

கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

I. கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை/ தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்ற நடவடிக்கை (அல்லது) ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல்/ முடிவுற்றிருத்தல், கிளர்ச்சி (அல்லது) ஏதேனும் அரசியலமைப்பில் பங்கேற்று பாராளுமன்ற/ மாநில சட்டசபை/ உள்ளாட்சி தேர்தல்களில் பங்கேற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை/ துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பின் போதும் கலந்தாய்வின் போதும் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், இன்றியமையாத தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை எடுக்கப்படும்.

J. இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள் / தகுதிக்கான காரணிகளான வயது, வகுப்பு பிரிவுகள், கல்வித்தகுதி, உடற்தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**

<u>**இணைப்பு**</u>

<u>**இளநிலை உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்**</u>

| பாஸ்போர்ட் அளவு புகைப்படம் |
|---|

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2. | பிறந்த தேதி | |
| 3. | 01.07.2018 அன்றுள்ளவாறு வயது | |
| 4. | தந்தை / கணவர் பெயர் | |
| 5. | தாயார் பெயர் | |
| 6. | பாலினம் | ஆண்/ பெண்/ மூன்றாம் பாலினம் |
| 7. | தாய்மொழி | |
| 8. | தேசிய இனம் | |
| 9. | மதம் | |
| 10. | வகுப்பு | SC/ST/BC/MBC |
| 11. | உட்பிரிவு | |
| 12. | கல்வி தகுதி | |
| 13. | முன்னுரிமை கோருகிறீரா | ஆம் / இல்லை |
| 14. | ஆம் எனில், உரியவற்றை தேர்ந்தெடுக்கவும். | ஆதரவற்ற விதவை / மாற்றுத் திறனாளி/ தமிழ்வழி கல்வி /முன்னாள் இராணுவத்தினர் / பிற முன்னுரிமைகள் |
| 15. | விண்ணப்ப கட்டணம் விவரம் | வங்கியின் பெயர் ..............................................<br>கிளை ....................................................................<br>DD எண். ............................................................<br>நாள் : .................................... |
| 16. | தொடர்பு முகவரி | |

| | | |
|---|---|---|
| 17. | நிரந்தர முகவரி | |
| 18. | கைப்பேசி எண் | |
| 19. | காவல் துறையில் வழக்கு இருந்தால் அதன் விவரம் | |
| 20. | வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண் இருப்பின் அதன் விவரம் | |

**உறுதிமொழி**

இந்த விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை. இவ்விவரங்கள் தவறு அல்லது உண்மைக்கு புறம்பானது அல்லது தகுதியின்மை என அறியும் பட்சத்தில் என் மீது எடுக்கப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன்.

**நாள் :**

**இடம்:** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் (சுய சான்றொப்பம் இடப்பட்டது)**

1. வங்கியிலிருந்து பெறப்பட்ட வரைவோலை (D.D) அசல்
2. வயது சான்றிதழ் நகல் (பிறப்பு சான்றிதழ் / ஆதார் அட்டை / மாற்று சான்றிதழ்)
3. ஆளறிசான்றிதழ் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / குடும்ப அட்டை)
4. நிரந்தர இருப்பிட முகவரி சான்றிதழ் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / குடும்ப அட்டை)
5. சுய முகவரியிட்ட ரூ.25–க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய அஞ்சல் உறை
6. கல்வித்தகுதி சான்றிதழ் நகல்
7. சாதி சான்றிதழ் நகல்
8. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பின் அதன் நகல்
9. தமிழ்வழி படித்தற்கான சான்றிதழ் நகல்
10. முன்னுரிமை (Priority) கோரின் தகுந்த சான்றிதழ்கள் நகல் (ஆதரவற்ற விதவை/ முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இதர முன்னுரிமைகள்)
11. மாற்றுத் திறனாளியாகயிருப்பின் அதற்குரிய சான்றிதழ் நகல் (உடல் ஊனத்திற்கான அளவு 40 விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது)

<u>இணைப்பு</u>

<u>கணினி இயக்குபவர் பதவிக்கான விண்ணப்பம்</u>

பாஸ்போர்ட்
அளவு
புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2. | பிறந்த தேதி | |
| 3. | 01.07.2018 அன்றுள்ளவாறு வயது | |
| 4. | தந்தை / கணவர் பெயர் | |
| 5. | தாயார் பெயர் | |
| 6. | பாலினம் | ஆண்/ பெண்/ மூன்றாம் பாலினம் |
| 7. | தாய்மொழி | |
| 8. | தேசிய இனம் | |
| 9. | மதம் | |
| 10. | வகுப்பு | SC/ST/BC/MBC |
| 11. | உட்பிரிவு | |
| 12. | கல்வி தகுதி | |
| 13. | தொழில்நுட்ப தகுதி (கணினியில் சான்றிதழ் அல்லது பட்டயப்படிப்பு) விவரம் | |
| 14. | முன்னுரிமை கோருகிறீரா | ஆம் / இல்லை |
| 15. | ஆம் எனில், உரியவற்றை தேர்ந்தெடுக்கவும். | ஆதரவற்ற விதவை / மாற்றுத் திறனாளி/ தமிழ்வழி கல்வி /முன்னாள் இராணுவத்தினர் / பிற முன்னுரிமைகள் |
| 16. | விண்ணப்ப கட்டணம் விவரம் | வங்கியின் பெயர் ............................................<br>கிளை ...................................................................<br>DD எண். ............................................................<br>நாள் : ................................... |
| 17. | தொடர்பு முகவரி | |

| | | |
|---|---|---|
| 18. | நிரந்தர முகவரி | |
| 19. | கைப்பேசி எண் | |
| 20. | காவல் துறையில் வழக்கு இருந்தால் அதன் விவரம் | |
| 21. | வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண் இருப்பின் அதன் விவரம் | |

**உறுதிமொழி**

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை. இவ்விவரங்கள் தவறு அல்லது உண்மைக்கு புறம்பானது அல்லது தகுதியின்மை என அறியும் பட்சத்தில் என் மீது எடுக்கப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன்.

**நாள் :**

**இடம்:** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் (சுய சான்றொப்பம் இடப்பட்டது)**

1. வங்கியிலிருந்து பெறப்பட்ட வரைவோலை (D.D) அசல்
2. வயது சான்றிதழ் நகல் (பிறப்பு சான்றிதழ் / ஆதார் அட்டை / மாற்று சான்றிதழ்)
3. ஆளறிசான்றிதழ் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / குடும்ப அட்டை)
4. நிரந்தர இருப்பிட முகவரி சான்றிதழ் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / குடும்ப அட்டை)
5. சுய முகவரியிட்ட ரூ.25–க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய அஞ்சல் உறை
6. கல்வித்தகுதி சான்றிதழ் நகல்
7. தொழில்நுட்ப தகுதி (கணினி) சான்றிதழ் நகல்
8. சாதி சான்றிதழ் நகல்
9. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பின் அதன் நகல்
10. தமிழ்வழி படித்தற்கான சான்றிதழ் நகல்
11. முன்னுரிமை (Priority) கோரின் தகுந்த சான்றிதழ்கள் நகல் (ஆதரவற்ற விதவை/ முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இதர முன்னுரிமைகள்)
12. மாற்றுத் திறனாளியாகயிருப்பின் அதற்குரிய சான்றிதழ் நகல் (உடல் ஊனத்திற்கான அளவு 40 விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது)